**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**முன்னிலை:– திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர்.**

**2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் நாள் சனிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஆடி திங்கள் 17 ம் நாள்**

**<u>இடைக்கால மனு எண். 334/2025</u>**
**இன்**
**<u>அசல் வழக்கு எண். 212/2020</u>**

C. சுந்தர்ராஜ் ..மனுதாரர்/ 2ம் பிரதிவாதி

/எதிர்/

1. C.ஜெகநாதன் ..எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி
2. C. விஸ்வநாதன்
3. A.ஜெயலட்சுமி
4. V.சௌந்தரம் ..எதிர்மனுதாரர்கள்/ 3 முதல் 5 பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 28.07.2025ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.சோமசுந்தரம் அவர்கள் முன்னிலையாகியும், 3,4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராமசாமி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>உத்தரவு</u>**

1908 ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 23, விதி 1–A மற்றும் கட்டளை 1 விதி 10 (2)–ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :**

**2.1** மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி. மனுதாரரின் தகப்பனார் சின்னப்பனுக்கு அவரது மனைவி பார்வதியம்மாள் எழுதி வைத்த பதிவு செய்யப்படாத உயில்படி தாவா சொத்து பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருந்துபோது மனுதாரரின் தகப்பனார் சின்னப்பன் கடந்த 28.01.2005ம் தேதியில் இறந்துவிட்டார். மேற்படி சின்னப்பன் இறப்பதற்கு முன்பே 06.05.2023ம் தேதியிட்ட உயில் ஆவணத்தை தாவா சொத்தை பொறுத்து மனுதாரர் மற்றும் 1ம் பிரதிவாதியின் மகன் ரகு ஆகியோர்களுக்கு எழுதிவைத்துள்ளார்.

**2.2** மனுதாரரின் தகப்பனார் சின்னப்பனின் சட்டப்படியான வாரிசுகள் ஏற்கனவே அசல் வழக்கில் தரப்பினர்களாக உள்ளார்கள். மனுதாரர் மற்றும் ரகுவின் பெயரில் உயில் ஆவணம் எழுதப்பட்டுள்ளதால் அசல் வழக்கிற்கு அவர்கள் அவசியத்தரப்பினர்கள். எனவே அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியான மனுதாரரை 2ம் வாதியாக சேர்க்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>3,4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

**3.1.** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. கடந்த 29.01.2025ம் தேதியன்று வாதி சின்னப்பன் இறந்து விட்டார். மேற்படி சின்னப்பன், மனுதாரர் மற்றும் ரகுவிற்கு கடந்த 06.05.2023ம் தேதியில் ஒரு உயில் எழுதிவைத்துள்ளார் என்பது தவறானதாகும். மேற்படி உயில்சாசனம் மனுதாரர் மற்றும் ஜெகநாதன் ஆகியோர்களால் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது.

**3.2** கடந்த 10.02.2006ம் தேதியில் சின்னப்பன் பெயருக்கு எழுத்திவைத்துள்ளதாக கூறும் உயில்சாசனம் மோசடியானது. மேற்படி உயில்சாசனத்தை பார்வதியம்மாளுக்கு மூன்று ஆண் வாரிசுகள் மட்டுமே உள்ளதாக

கூறுவது தவறாகும். பார்வதியம்மாளுக்கு 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்களான ஜெயலட்சுமி மற்றும் சௌந்தரம் ஆகிய பெண் மக்கள் வாரிசுகளாக உள்ளதை மறைத்து மேற்படி உயில்சாசனத்தை மோசடியாக 1, 2 பிரதிவாதிகள் தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்கள்.

**3.3** கடந்த 20.11.2024ம் தேதியில் 2ம் பிரதிவாதி சுந்தரராஜனுக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் சார்பு செய்யப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி வழக்கறிஞர் வைத்து ஆஜரகியுள்ளார். கடந்த 06.12.2024 தேதி முதல் 20.06.2025 வரை இந்நீதிமன்றதால் பல வாய்தா கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த 8 மாதங்களாக 2ம் பிரதிவாதி எந்த ஒரு எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யவில்லை. 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் காலஅவகாசம் கேட்டு மனுக்களை போட்டு வாய்தா வாங்கி வந்துள்ளார்.

**3.4** ரகு என்பரை வழக்கில் கட்சி சேர்க்க எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் மனுவை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறாகும். சின்னப்பன் தாக்கல் செய்துள்ள விளம்புகை பரிகாரம் கோரும் வழக்கில் 2ம் பிரதிவாதியை, 2ம் வாதியாக மாற்றம் செய்ய அனுமதி கோர 2ம் பிரதிவாதிக்கு சட்டப்படி எந்த ஒரு உரிமையும் கிடையாது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கானது ஏற்கனவே அபேட் ஆகிவிட்டது. அதனால் தாவா சொத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு முழு பாகபாத்திய உரிமை ஏற்பட்டுள்ளது.

**3.5** பார்வதியம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் யாருக்கும் உயில்சாசனம் எழுதிவைக்கவில்லை. உடல்நலம் சரியில்லாமல் இருந்து வந்தார். வாதி சின்னப்பன் வழக்கை தாக்கல் செய்தபோது 1ம் பிரதிவாதி ஜெகநாதனுக்கு எதிராக மட்டுமே வழக்கை தாக்கல் செய்திருந்தார். பின்னர் நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகு 2 முதல் 5 பிரதிவாதிகளை தரப்பினராக வழக்கில் கட்சி சேர்த்துள்ளார்கள். தாவா செத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு சட்ட படி 1/5 பாகபாத்தி உரிமை ஏற்பட்டுள்ளது. மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு எதாவது சொத்தில் உரிமை இருந்தால் அவர்

பாகப்பிரிவினை பரிகாரம் கோரி மட்டுமே வழக்கை தாக்கல் செய்துக்கொள்ள முடியும். வாதி சின்னப்பன் தாக்கல் செய்துள்ள வழக்கின் மனுதாரர்/2ம் பிரதிவாதி எந்த ஒரு பரிகாரத்தையும் கோர முடியாது.

**3.6** கடந்த 10.02.2006ம் தேதியில் பார்வதியம்மாள் எழுதிவைத்துள்ளதாக கூறும் மோசடியான உயில்சாசனத்தை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமை கொடுக்கப்படவில்லை. 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து கூட்டு சதி செய்து கடந்த 06.02.2023ம் தேதியிட்ட உயில்சாசனத்தை மோசடியாக தயார் செய்து அதை வைத்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், " மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**6. <u>தீர்வு</u> :–**

**6.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், தாவா சொத்து பொறுத்து காலம்சென்ற வாதி, மனுதாரர் பெயரில் உயில் எழுதி வைத்துள்ளதால் இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், கடந்த 10.02.2006ம் தேதியன்று காலம்சென்ற வாதி பெயரில் உள்ள உயில் ஆவணம் மோசடியான ஒன்று என்பதால் தாவா சொத்து பொறுத்து காலம்சென்ற வாதிக்கு 06.05.023ம் தேதியிட்ட உயில் ஆவணம் எழுதி வைப்பதற்கு உரிமையில்லை என்றும், மேற்படி இரு உயில் ஆவணங்களும் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம்

என்றும், காலம்சென்ற வாதிக்கும் அவரது மனைவி பார்வதியம்மாளுக்கும் பிறந்துள்ள பெண் வாரிசுகளான 3,4 எதிர்மனுதாரர்களை மறைத்து மேற்படி 10.02.2006ம் தேதியிட்ட உயில் ஆவணம் மோசடியாக எழுதப்பட்டுள்ளது என்றும், 2020ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி இன்று வரை எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத நிலையில் அவரை 2ம் வாதியாக சேர்க்க கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது கடந்த 10.02.2006ம் தேதியிட்ட உயில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா A அட்டவணை சொத்தே தவிர, அது B அட்டவணை சொத்து அல்ல என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.4** கடந்த 14.09.1959ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தாவா 1வது அயிட்ட சொத்தை காலம்சென்ற வாதியின் மனைவி பார்வதியம்மாள் கிரையம் பெற்றதாகவும், கடந்த 31.08.1956ம் தேதியிட்ட கிரைய ஆவணப்படி தாவா இரண்டாவது அயிட்ட சொத்தை காலம்சென்ற வாதி கிரையம் பெற்று, அதனை அவரது மனைவிக்கு கடந்த 17.03.1958ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணப்படி எழுதிக்கொடுத்ததாகவும், அதன்பிறகு கடந்த 10.02.2006ம் தேதியிட்ட உயில் ஆவணப்படி மேற்படி பார்வதியம்மாள் மேற்படி சொத்துக்களை காலம்சென்ற வாதிக்கு எழுதிக்கொடுத்ததாகவும், கடந்த 21.08.2006ம் தேதி பார்வதியம்மாள் இறந்து விட்டதாகவும், மேற்படி உயில் ஆவணத்தில் உள்ள தவறுகளை சரிசெய்ய வேண்டி விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.5** கடந்த 10.02.2006ம் தேதியிட்ட உயில் ஆவணம் மற்றும் 06.05.2023ம் தேதியிட்ட உயில் ஆவணம் ஆகியவற்றின் உண்மை தன்மை குறித்தும், அசல் வழக்கிற்கான அவசியத்தரப்பினர்கள் குறித்தும் அசல் வழக்கின் தீர்வில் தான் தீர்வு காண இயலும். அசல் வழக்கு நிலுவையில் உள்ளபோது வாதி இறந்து விட்டதாலும்,

தாவா சொத்தை அவர் கடந்த 06.05.2023ம் தேதியிட்ட உயில் ஆவணம் மூலம் மனுதாரர் மற்றும் ஒரு ரகுவிற்கு எழுதி வைத்துள்ளதாலும், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மேலும் பல வழக்குகளுக்கு வழிவகுக்கும் என்பதாலும் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியாக உள்ள மனுதாரரை, 2ம் வாதியாக மாற்றம் செய்வது அசல் வழக்கின் தீர்விற்கு அவசியமான ஒன்று என்று முடிவு செய்து மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, இன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI Digitally signed by A SUBASHRI Date: 2025.08.02 16:44:28 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை.

A SUBASHRI Digitally signed by A SUBASHRI Date: 2025.08.02 16:44:34 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.